Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III TIRUPATTUR**

Case No CC.NO. 189/2021

**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.1 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. இளங்கோ | **தொழில்** | வனச்சரக அலுவலர் (ஓய்வு) |
| **த/க பெயர்** | திரு. சண்முகம் | **கிராமம்/ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 61 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 15th day of July 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.-**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 05.04.2021 அன்று காலை 04.30 மணிக்கு ஆலங்காயம் வனச்சரக அலுவலகத்தில் இருந்து வனவர் திரு. முத்தன் அவர்கள் தலைமையில் வனக்காப்பாளர் முருகன், வெங்கடேசன், சுகுமார் மற்றும் வனக்காவலர் பாரதி தாசன் ஆகியோருடன் அரசு ஈப்பு எண். TN 83 G 0085 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் புறப்பட்டு நரசிங்கபுரம் காப்புக்காட்டிற்கு சென்று, சுமார் 05.30 மணிக்கு வாகனத்தை நிறுத்தி விட்டு தணிக்கை மேற்கொண்டபோது, சுமார் 06.00 மணியளவில் நாகமரத்து ஓடை வனச்சரகத்தில் வெடிசத்தம் கேட்டு அந்த பகுதியை நோக்கி சென்று அங்கிருந்த நபரை சுற்றி வளைத்து விசாரித்தபோது அந்த நபர் வெடியால் வாய்கிழிந்த நிலையில் இருந்த ஒரு புள்ளி மானை வைத்திருந்தார், பின்னர் அந்த மான் காயமுற்ற நிலையில் எழுந்து ஓடிவிட்டது. அந்த நபர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அந்த மான் கிடைக்கவில்லை. வனக்காப்பாளர் வெங்கடேசன் அந்த பகுதியில் இருந்து 21 வாய் கண்ணிவெடிகளை கைப்பற்றி அதை முருகன் வனக்காப்பாளர் H நமுனாவில் அன்று காலை 06.15 மணியளவில் பதிவு செய்தார்.

பின்னர் தடய சொத்துக்களை வனவர் முத்தன் அவர்கள் கைப்பற்றி கொண்டார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை ஆலங்காயம் வனச்சரக அலுவலகத்திற்கு மேற்படி ஈப்பு வாகனத்தில் எடுத்து வந்து வனச்சரக குற்ற எண். 4/2021 பதிவு செய்யப்பட்டது. காப்புக்காட்டில் அத்துமீறி நுழைந்ததற்காகவும், புள்ளிமானை வெடி மருந்து மூலம் வேட்டையாடியதற்காகவும் எதிரியின் மீது தமிழ்நாடு வனச்சட்டப்பிரிவு 21(d)(h) மற்றும் இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 ன் படியும், திருத்தப்பட்ட வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 39 ன் படியும், பிரிவு 50,21 ன் படியும் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என எதிரிக்கெதிராக அறிக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள **H நமுனா, மகசர் நமுனா, சம்பவயிடத்தின் தோராய வரைபடம், சொத்து விவர பட்டியல் ஆகியவை முறையே என்னால் பு.சா.ஆ 1 முதல் 4 வரை குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாணை</u>

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

**(Sd/- S. Kovendhan)**

**Signature of Witness** **Judicial Magistrate No.III (FAC)**

**Tirupathur.**